# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**28/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி. பரிமிளா | ஊர் | : | அய்யம்பேட்டை |
| க.பெ. | : | திரு. சேகர் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 49 | தொழில் | : | தற்காலிக வேலை |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள் **பிசா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போது அதிகார பத்திர நகல் தாக்கல் செய்கிறேன் அதன் அசல் அ, வ.எண். 150/2021 -ல் தாக்கல் செய்துள்ளேன். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். வாதி தரப்பில் ஆட்சேயபிக்கப்பட்டது. 2009 முதல் 2018 வரையிலான காலத்தில் சேகர் பெயருக்கு பணம் அனுப்பப்பட்டதை காண்பிக்கக்கூடிய படிவங்கள் 7 தாள்கள் தாக்கல் செய்கின்றேன். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். என் பெயலரால் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சக்கிரா பள்ளி சேமிப்பு கணக்கின் 2014 ஜனவரி முதல் 2026 வரையிலான கால கெடுவில் நடந்த பரிவர்த்தனை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.வா.ஆ.3 ஆகும். சுப்ரமணியன் என்பவருக்கு நான் கிரையம் செய்த கொடுத்த கிரைய பத்திர சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். தனியார் வங்கியில் நான் கடன் பெற்றதை காண்பிக்கக்கூடிய கணக்கு புத்தகம் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ. 5 ஆகும். வாதியின் சகோதரர் எங்களுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ. எண்.150/2021 வழக்கின் சார்பு செய்யப்பட்ட பிராது தநகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.6 ஆகும். என் கணவர் எனக்கு எதிராக தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

கெச்.எம்.ஓ.பி 176/2018 வழக்கு மனு நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.7 ஆகும். நான் செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் 4 தாள்கள் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.8 ஆகும். மின் கட்டண அட்டை 5 எண்ணிக்கை தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.9 ஆகும்.

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.23 18:46:42 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**